# பொருளியல்

## வருமான வட்டப் பாய்ச்சல்



The National e-learning Portal for The General Education


Start Your Learning Journey with e-thaksalawa

**தேர்ச்சி :- 5.2**

## வருமான வட்டப் பாய்ச்சல்

### பொருளாதாரத்துறைகள்/பொருளாதார இயக்கிகள்

பேரினப் பொருளியலுக்குப் பங்களிப்பு செய்கின்ற பல்வேறு துறைகள் பொருளாதாரத் துறைகள் ஆகும்.




### வீட்டுத்துறையின் பிரதான தொழிற்பாடுகள்

1. பொருளாதாரத்திலுள்ள உற்பத்திக் காரணிகளின் உரிமை வீட்டுத்துறைக்குரியதாகும் அதேவேளை அவ்வுற்பத்திக் காரணிகளை நிறுவனத்துறைக்கு வழுங்குவதன் மூலம் காரணி வருமானங்களை உழைத்தல்.
2. நிறுவனத்துறை உற்பத்தி செய்யும் பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்தல்.
3. அரசுக்கு வரி செலுத்துவதுடன் அரசினால் வழங்கப்படும் பொதுச்சேவைகளை நுகர்தல்.
4. பொருளாதாரத்திற்கும் சேமிப்புக்கும் பங்களிப்புச் செய்தல்

### நிறுவனத்துறையின் பிரதான தொழிற்பாடுகள் :-

1. வீட்டுத்துறையிடம் உற்பத்திக் காரணிகளைக் கொள்வனவு செய்து பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல்.
2. பொருட்கள் சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் வருமானங்களை உழைத்தல்
3. அரசுக்கு வரியைச் செலுத்தல்
4. முதலீடுகளை மேற்கொள்ளுதல்

தொகுப்பு :- திரு.இ.ஞானேஸ்வரன், ஆசிரியர்-பொருளியல், (யா/அருனோதயா கல்லூரி, அளவெட்டி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**அரசுத்துறையின் பிரதான தொழிற்பாடுகள் :-**

1.பொதுப்பண்டம், சமூகநலப்பண்டம் என்பவற்றை வழங்குதல்

2.வரிகளை அறவிடுதல்

3.மானியங்களை வழங்குதல்

4.தேசிய பாதுகாப்பு, சட்டத்தையும் சமாதானத்தையும் பேணல், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் கல்வி சுகாதாரம் போன்றவற்றை வழங்குதல்.

**வெளிநாட்டுத்துறையின் தொழிற்பாடுகள் :-**

1.பொருட்கள் சேவைகளை ஏற்றுமதி, இறக்குமதி செய்தல்

2.வெளிநாட்டுக் காரணி வருமானப் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்

**வருமான வட்டப் பாய்ச்சல் :-**

பொருளாதாரமொன்றினை இயக்குகின்ற பல்வேறு பொருளாதாரத்துறைகளுக்கிடையே ஏற்படுகின்ற பணரீதியிலான, மெய்ரீதியான பாய்சல் வருமான வட்டப் பாச்சலாகும்.

பொருளாதாரத்தினை பின்வருமாறு வகைப்படுத்தி வருமான வட்டப் பாய்ச்சலை விளக்கலாம்.

1.எளிய பொருளாதார மாதிரி


2.அரசதுறையுள்ள மூடிய பொருளாதார மாதிரி

3.திறந்த பொருளாதார மாதிரி



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## எளிய பொருளாதார மாதிரி




⇒ வரைபின்படி வீட்டுத்துறையிலிருந்து உற்பத்திக் காரணிகள் நிறுவனத்துறைக்குச் செல்ல நிறுவனத்துறையிடமிருந்து வீட்டுத்துறைக்கு காரணி வருமானங்கள் செல்கிறது

⇒ நிறுவனத்துறை தாம் பெற்ற காரணிகளைக் கொண்டு பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து வீட்டுத்துறைக்கு வழங்க வீட்டுத்துறை நிறுவனத்திற்கு பொருட்கள் சேவைகளுக்கான கொடுப்பனவை வழங்குகின்றது.

⇒ வீட்டுத்துறையிடமிருந்து நிறுவனத்திற்கு உற்பத்திக் காரணிகள் செல்வதும், நிறுவனத்திடமிருந்து வீட்டுத்துறைக்கு பொருட்கள் சேவைகள் செல்வதும் மெய்பாய்ச்சல் எனப்படும்.


⇒ நிறுவனத்துறையிடமிருந்து வீட்டுத்துறைக்கு காரணி வருமானங்கள் செல்வதும், வீட்டுத்துறையிடமிருந்து நிறுவனத்திற்கு பொருட்கள் சேவைகள் மீதான நுகர்வுச் செலவு செல்வதும் பணப்பாச்சல் எனும் எண்ணக்கருவால் விளக்கப்படும்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அரசதுறையுள்ள மூடிய பொருளாதாரம் :-

எளிய பொருளாதாரத்துடன் அரசதுறை செயற்பாடுகள் இணையும்போது அது அரசதுறையுள்ள மூடிய பொருளாதாரமாக அமைகிறது.





## திறந்த பொருளாதாரம் :-

மூடிய பொருளாதாரச் செயற்பாடுகளுடன் வெளிநாட்டுத்துறை செயற்பாடுகள் இணையும் போது அது திறந்த பொருளாதாரமாக மாற்றமடைகின்றது.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk




மேலே காட்டப்பட்ட வரைபின் படி தேசிய கணக்கீட்டின் அணுகுமுறைகள் மூன்றும் காட்டப்பட்டுள்ளன. அவையாவன

1. வீட்டுத்துறையிடமிருந்து பெற்ற உற்பத்திக் காரணிகளை இணைத்து நிறுவனத்துறையினரால் பொருட்கள் சேவைகள் உற்பத்தி செய்யப்படுதல் அதுவே உற்பத்தி அணுகுமுறையாகும்.
2. நிறுவனத்துறையினரால் வீட்டுத்துறையினருக்கு காரணி வருமானப் பாய்ச்சல் ஒன்று செல்கின்றது. அதுவே வருமான அணுகுமுறை ஆகும்
3. வீட்டுத்துறையினரால் நிறுவனத்துறையிடமிருந்து பொருட்கள் சேவைகள் கொள்வனவு செய்யப்படுகின்றது. அதுவே செலவுவழி அணுகுமுறையாகும்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பல்தேர்வு வினாக்கள்

1. வர்த்தக சகட வோட்டக் கட்டங்களின் சரியான ஒழுங்கைக் குறிக்கும் தொகுதி எது ?
   1) செழிப்பு, மீட்சி, பின்னடைவு, மந்தம்
   2) மந்தம், மீட்சி, பின்னடைவு, செழிப்பு
   3) பின்னடைவு, மீட்சி, மந்தம், செழிப்பு
   4) மீட்சி, செழிப்பு, மந்தம், பின்னடைவு
   5) பின்னடைவு, மந்தம், மீட்சி, செழிப்பு

2. வர்த்தக சகட வோட்டத்தில் பின்னடைவுக் கட்டத்தின் பண்புகளைக்காட்டும் சரியான தொகுதியை இனங்காண்க ?

| இல | மெய்யுற்பத்தி | வேலைவாய்ப்பு | பணவீக்கம் |
|---|---|---|---|
| 01 | வீழ்ச்சி | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| 02 | அதிகரிப்பு | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| 03 | அதிகரிப்பு | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| 04 | அதிகரிப்பு | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| 05 | வீழ்ச்சி | அதிகரிப்பு | அதிகரிப்பு |

3. பின்வருவனவற்றில் எதிர் வெளியீட்டு இடைவெளியைக் குறிப்பது ?
   1) மெய்யுற்பத்தி, சாத்தியவெளியீடு என்பன சமனாகக் காணப்படுதல்
   2) சாத்தியவள உற்பத்தியை விட மெய்யற்பத்தி குறைவாக இருத்தல்
   3) சாத்தியவள உற்பத்தியை விட மெய்யற்பத்தி அதிகமாக இருத்தல்
   4) மெய்யுற்பத்தியும் சாத்தியவள வெளியீடும் குறைவாக இருத்தல்
   5) மெய்யுற்பத்தியும் சாத்தியவள வெளியீடும் அதிகமாக இருத்தல்

தொகுப்பு :- திரு.இ.ஞானேஸ்வரன், ஆசிரியர்-பொருளியல், (யா/அருணோதயா கல்லூரி, அளவெட்டி)
கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

4. பின்வருவனவற்றுள் பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்களைக் காட்டும் தொகுதி ?

1) நிறைதொழில்மட்டம், நியாயத்துவம், பொருளாதார உறுதி, வட்டி வீத உறுதி
2) நிறைதொழில்மட்டம், நிலைத்திருக்கும் அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி, சனத்தொகை உறுதி
3) நாணய மாற்று வீத உறுதி, நிறை தொழில்மட்டம், நியாயத்துவம் மற்றும் விலையுறுதி
4) நாணயமாற்று வீத உறுதி, நிறை தொழில்மட்டம், நியாயத்துவம் மற்றும் வட்டிவீத உறுதி
5) சென்மதிநிலுவை உறுதி, நியாயத்துவம், வட்டிவீத உறுதி, நிறைதொழில்மட்டம்

5. பின்வருவனவற்றுள் எச்சேர்க்கை மெய்ப்பாய்ச்சல், பணப்பாச்சல்களைச் சரியாகப் புலப்படுத்துகின்றது ?

| இல | மெய்ப்பாய்ச்சல் | பணப்பாய்ச்சல் |
|---|---|---|
| 01 | உற்பத்திக் காரணிகள் | பொருட்கள் சேவைகள் |
| 02 | காரணி வருமானம் | நுகர்வுச்செலவு |
| 03 | காரணி வருமானம் | உற்பத்திக் காரணிகள் |
| 04 | உற்பத்திக் காரணிகள் | நுகர்வுச்செலவு |
| 05 | சேமிப்பு | முதலீடு |

**ஒப்படை**

எளிய பொருளாதாரமொன்றின் வருமானவட்டப் பாய்ச்சல் மாதிரியை வரைந்து மெய்ப்பாய்ச்சல் பணப்பாச்சல் என்பவற்றின் செயற்பாடுகளை தட்டச்ச செய்க.

தொகுப்பு :- திரு.இ.ஞானேஸ்வரன், ஆசிரியர்-பொருளியல், (யா/அருனோதயா கல்லூரி, அளவெட்டி)
கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk